செய்தி வெளியீடு எண்: 062 நாள்: 23.01.2018

**பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு இலவச பயண அட்டையை தொடர்ந்து வழங்குவது குறித்த**
**போக்குவரத்து துறையின் செய்தி வெளியீடு**

மாணவர்களின் நலனைக் கருதி, மாண்புமிகு அம்மாவின் அரசு, அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கும் (10+2) வரையிலும், அரசு கல்லூரிகளில் படிக்கும் அனைத்து மாணாக்கர்களுக்கும் இலவச பயண அட்டையை வழங்கி வருகிறது. மேலும் தனியார் கல்லூரிகளில் படிக்கும் மாணாக்கர்களுக்கும் பழைய பேருந்து கட்டண அடிப்படையில், 50 சதவீதம் மானியம் வழங்கி வருகிறது.

- 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணாக்கர்களுக்கும் (அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள்) 100 சதவீத இலவச பயண சலுகையின் மூலம் 22,66,483 பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. **இந்த சலுகை, பேருந்துக் கட்டணம் மாற்றியமைத்த பின்பும் தொடர்ந்து வழங்கப்படும்.**

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரசு பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு 100 சதவீத இலவச பயண சலுகையின் மூலம் முறையே 2,13,810, 35,921, 28,348 பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. **இந்த சலுகை, பேருந்துக் கட்டணம் மாற்றியமைத்த பின்பும் தொடர்ந்து வழங்கப்படும்.**

- தனியார் கல்லூரிகளில் கல்வி பயிலும் 3.21 லட்சம் மாணவ மாணவியர்களுக்கு 50 சதவீதம் கட்டண சலுகையுடன் கூடிய பயண அட்டைகளை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. **இந்த சலுகையும், பழைய கட்டணத்தின் அடிப்படையிலேயே தொடர்ந்து வழங்கப்படும்.**

மேற்படி மாணாக்கர்ளுக்கான பயண அட்டைகளை வழங்குவதற்கு ஆகும் செலவுகளை ஈடுசெய்யும் பொருட்டு 2017–18–ஆம் ஆண்டில் ரூ.540.99 கோடியினை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு மானியமாக தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

இதைத்தவிர, பொதுமக்களுக்கு எழும் சிரமங்களை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஏற்கனவே இருந்த சாதாரண மற்றும் விரைவு பேருந்துகளுடன், கூடுதலாக, 498 விரைவு மற்றும் சொகுசு பேருந்துகளை சாதாரண மற்றும் விரைவு கட்டண பேருந்துகளாக மாற்றியமைத்துள்ளது.

*******

வெளியீடு – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை
நாள் – 23.1.2018